## நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2019

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை II, பிரிவு II (இ) (3) மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09 (ஆ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் தண்ணீர் சேவைகளை குழாயிடுவதற்கான அணுகல் மற்றும் முன்னேற்றப்பட்ட சுகாதாரம் என்பவற்றை அதிகரித்தல் மற்றும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 2,840 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக பங்களிப்பு ஊடாக நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கிராமிய மற்றும் தோட்ட நீர் வழங்கல் திட்டங்களிற்கான ரூபா 38.26 மில்லியன் மற்றும் கிராமிய நீர் வழங்கல் புனரமைப்பு திட்டங்களிற்கான ரூபா 1.3 மில்லியன் தொகையான சமூக பங்களிப்பு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சமூக பங்களிப்பு மீதி ரூபா 39.56 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 39.56 | சமூக பங்களிப்பு குறைத்துக் காட்டப்படுதல் | 2020 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் சரியான சமூக பங்களிப்பு தொகை இனங்காணப்படும். | செயற்திட்டத்தின் சரியான மொத்த சமூக பங்களிப்பை பிரதிபலிப்பதற்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 16,346.7 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 90 மில்லியன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்வழங்கும் முகவரால் பணவளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த தொகை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,392.03 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக கடன்பெறுகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,954.67 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 1,954.67 | கடன் மீதி குறைத்துக் காட்டப்படுதல் | நிதிக்கூற்று சரியான கடன் தொகையை காட்டுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பிழையான கடன் மீதியை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | பூர்த்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 221.80 மில்லியன் தொகையான கிராமிய நீர் வழங்கல் புனரமைப்பு செயற்திட்டங்கள் 10 இன் கிரயம் மூலதனமாக்கப்படாமல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 221.80 | நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பின் அபிவிருத்தி செலவினம் குறைத்துக் காட்டப்படுதல். | 2020 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய அபிவிருத்தி செலவின வகைப்படுத்தலின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண செயற்திட்ட கிரயம் இனங்காணப்படும். | பூர்த்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட மலசலகூடங்களின் கிரயம் ரூபா 532.91 மில்லியனாக காணப்பட்ட போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 273.53 மில்லியன் தொகை மாத்திரமே மூலதனமாக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி செலவினம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 259.38 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 259.38 | நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பின் அபிவிருத்தி செலவினம் குறைத்துக் காட்டப்படுதல். | 2020 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய அபிவிருத்தி செலவின வகைப்படுத்தலின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட சுகாதார செயற்திட்டங்களின் கிரயம் இனங்காணப்படும். | பூர்த்தி செய்யப்பட்ட மலசலகூடங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். |

**2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| விபரம் | தொகை<br>ரூபா | தீர்ப்பனவு செய்யப்படாத காலப்பகுதி | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் மீளளிக்கத்தக்க வைப்புக்கள் காணப்பட்டன. | 124,019,947 | மூன்று ஆண்டுகளிற்கு மேல் | செயற்திட்ட நிதிகளின் குறைப்பயன்பாடு | 2020 ஆம் ஆண்டின் போது அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தாமதமின்றி மீளளிக்கத்தக்க வைப்புக்கள் அறவிடப்பட வேண்டும். |

## 2.3 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் 170(3) ஆம் பிரிவு | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது 3 ஒப்பந்ததாரர்களிடமிருந்தான ரூபா 2.75 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்கள் 2020 யூலை 31 வரையிலும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளை பின்பற்றத் தவறுதல். | 2020 ஆம் ஆண்டினுள் அமைச்சிற்கு இத் தொகை மாற்றப்படும். | நிதிப்பிரமாண ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகளானது நகர, கிராமிய மற்றும் தோட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்துதல், பயிற்சி மற்றும் நீர் தர வரைபடத்தின் மூலம் துறைகளின் இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் ஆகிய பெயர்களிலான 04 கூறுகளை கொண்டுள்ளதுடன் அத்தகைய நடவடிக்கைகள் நுவரெலியா, கேகாலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, இரத்தினபுரி, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் அமுல்ப்படுத்தப்படுகின்றன. பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| செயற்பாடுகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் | | தாமதமான நாட்கள் | விளைவுகள் | தாமததிற்கான காரணமங்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க் கப்பட்டது | அடையப் பெற்றது | | | | |
| | % | % | | | | |
| **நகர நீர் வழங்கல் திட்டங்கள்** | | | | | | |
| பம்பஹின்ன நீர் வழங்கல் செயற்திட்டம் | 100 | 62 | 109 | எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு | அமுல்ப்படுத்தல் கட்டத்தில் | (i) வழங்கப்பட்ட இலக்கு திகதிகளினுள் ஒப்பந்த |
| முல்லைத்தீவு நீர் வழங்கல் | 100 | 85 | 264 | காலரீதியாக | ஒப்பந்ததாரர்களின் | வேலைகளை பூர்த்தி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செயற்திட்டம் முழங்காவில் நீர் வழங்கல் செயற்திட்டம் | | | 100 | 50 | 329 | அடையப்படாது | மோசமான செயலாற்றல்கள் மற்றும் மோசமான காசுப்பாய்ச்சல், கொவிட் 19 பெருந்தொற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், மோசமான சமூக பங்களிப்பு, மூலப்பொருட்களின் போக்குவரத்தில் உள்ள சிக்கல்கள், நீர் வளங்களை பயன்படுத்துவதற்கு எதிரான சமூகத்தின் ஆட்சேபனைகள் மற்றும் செயற்திட்டக் காலம் போதாமை ஆகியன தாமதங்களிற்கான பிரதான காரணங்களாகும். | செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br><br>(ii) ஒப்பந்ததாரர்களின் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களிற்காக கால நீடிப்புக்கள் வழங்கப்படக் கூடாது அத்துடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் நிகழ்வுகளின் போது தாமதக் கட்டணங்கள் கழிக்கப்பட வேண்டும்.<br><br>(iii) செயற்திட்டத்தின் செயற்பாடுகளை சரியான நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு பொதுத் திறைசேரியின் ஆலோசனையுடன் ஒப்பந்ததாரர்களிற்கு சலுகைகளை வழங்க நிறைவேற்றல் முகவர் முற்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **புனரமைப்பு மற்றும் கிராமிய நீர் வழங்கல் திட்டம்** | | | |
| கொத்மலை (மீள்-தொகுதி IV) புனரமைப்பு கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 90 | 55 | 87 |
| கிரிப்பன்வேவ புனரமைப்பு கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 91 | 181 |
| கமுனுபுர கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 65 | 31 |
| உடுபதன கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 47 | 321 |
| கல்பய நீர் வழங்கல் திட்டம் | 100 | 82 | 137 |
| பண்கிரிய கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 45 | 14 |
| சீன்கம கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 67 | 153 |
| பொகவன நீர் வழங்கல் திட்டத்திற்காக குழாய்களை வழங்கி நிறுவுதல் | 100 | 80 | 72 |
| அம்பகமுவ, பொகவன நீர் வழங்கல் திட்டம் | 100 | 70 | 29 |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 25.5 மில்லியன் கிரயத்தில் நுவரெலியா மாவட்டத்தில் மந்திரீதன்ன நீர் வழங்கல் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2017 திசெம்பர் 09 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் வேலைகளின் 70 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல் இன்னொரு ஒப்பந்ததாரரிற்கு 2019 ஆகஸ்ட் 29 இல் வழங்கப்பட்டு பூர்த்தி செய்தல் திகதி 2019 திசெம்பர் 11 ஆக காணப்பட்ட போதிலும் 2020 மார்ச் 30 வரையிலும் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு அவ் ஒப்பந்ததாரர் தவறியிருந்தார். | (i) ஒப்பந்த கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம்.<br>(ii) ஒப்பந்ததாரர்கள் விடுவிக்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தாமல் கால எல்லைக்கு மேலாக வைத்திருப்பார்கள். | 2020 யூலை 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | உரிய கால எல்லையினுள் பூர்த்தி செய்யும் பொருட்டு வேலைகள் ஒழுங்காக கண்காணிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 216.93 மில்லியன் கிரயத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்நகர் பதிபுரத்தில் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட சிவில் வேலைகள் ஒப்பந்தம் 2018 ஒக்தோபர் 20 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர் வேலைகளின் 31 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. மேலும் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல் வேறு | -மேற்படி- | இலக்கு காலத்தின் பிரகாரம் செயற்திட்டம் செயற்படுகின்றது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்ததாரரிற்கு 2019 நவம்பர் 15 இல் வழங்கப்பட்டு 2020 நவம்பர் 28 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2020 மார்ச் 31 வரையிலும் ஒப்பந்ததாரர் 2 சதவீத வேலைகளை மாத்திரமே பூர்த்தி செய்திருந்தார். | | | |
| (இ) | 2019 திசெம்பர் 22 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட மொனராகலை மாவட்டத்தின் கவுதாவ மற்றும் தொம்பகஹவெல நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான புனரமைப்பு ஒப்பந்தம் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக 75 சதவீத வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் முடிவுறுத்தப்பட்டது. எனினும் மிகுதி வேலைகள் 2020 மார்ச் 30 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | ஆறு மாதங்களிற்கு மிகுதி வேலைகளிற்காக கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் PPC இடமிருந்தான அங்கீகாரம் நிலுவையாகவுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | 10 நீர் வழங்கல் செயற்திட்டங்களில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரர்களிற்கு ஆரம்ப ஒப்பந்தக் காலப்பகுதியை விஞ்சியிருந்த போதிலும் அதே செயற்திட்டங்களிற்கு ஒன்று தொடக்கம் ஆறு சந்தர்ப்பங்கள் வரையான வீச்சில் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 105.19 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தப்படாமல் ஒப்பந்ததாரர்கள் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | காணிகளை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள், புவியில்ரீதியான தடைகள், பாதகமான காலநிலை காரணமாக இயற்கை அனர்த்தங்கள் மற்றும் வளங்களை பகிர்வதற்கான சமூக எதிர்ப்புக்கள் மற்றும் ஒத்துழைப்பின்மை என்பன செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்களிற்கான காரணங்களாகும். | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டிற்கான நீர் வழங்கல் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பதுளை - ஹல்தும்முல்ல நீர் வழங்கல் திட்டம் | உரிய திகதிகளினுள் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்திட்ட குறிக்கோள்களை அடைய | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு மேலதிக நிதிகளிற்காக காத்திருத்தல். | செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு ஆரம்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக காணி கொள்வனவு, மண் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்றவற்றிற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 7.06 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் 2020 யூலை 31 வரையிலும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | முடியாது. | | |
| (ஊ) | ரூபா 337.44 மில்லியன் கிரயத்தில் பதுளை தியத்தலாவ நீர் வழங்கல் திட்டத்திற்காக 2018 மே 23 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தம் 12 மாத காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டதுடன் 2019 மே 06 இல் ரூபா 57.65 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் செலுத்தப்பட்ட பின்னரும் கூட ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்ட ஏற்றுக்கொள்ளல் கடித திகதியிலிருந்து 42 நாட்களினுள் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒப்பந்ததாரர் ஆரம்பித்திருக்கவில்லை. திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 2019 ஒக்தோபர் 29 இல் உள்ளாறு 5 சதவீதமாக காணப்பட்டதுடன் ஒப்பந்ததாரர் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக வரிசை அமைச்சின் செயலாளரால் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணை என்பவற்றை காசாக்குவதற்கு கோரிக்கை கடிதம் (letter of demand) 2020 சனவரி 31 இல் வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் செயலாற்றல் | (i) ஒப்பந்த கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம்.<br><br>(ii) ஒப்பந்ததாரர்கள் விடுவிக்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்ணங்கனை செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தாமல் கால எல்லைக்கு மேலாக வைத்திருப்பார்கள். | ஒப்பந்ததாரர் சிறப்பாக மேற்கொள்வதற்கு இணங்கியிருந்ததால் முற்பண பிணை மீள அழைக்கப்பட்டது. | (i) உரிய கால எல்லையினுள் பூர்த்தி செய்யும் பொருட்டு வேலைகள் ஒழுங்காக கண்காணிக்கப்பட வேண்டும்.<br><br>(ii) முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தங்களிற்காக செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணை என்பன ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் மீள அழைக்கப்படாமல் விரைவாக காசாக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிணைமுறி மற்றும் முற்பண பிணை காசாக்கப்படாமல் செல்லுபடியாகும் காலம் ஏழு மாதங்களின் பின்னர் வரிசை அமைச்சின் செயலாளரால் நீடிக்கப்பட்டிருந்தது. | | | |
| (எ) | செயற்திட்டக் காலப்பகுதியின் போது மேற்குறிப்பிட்ட 07 மாவட்டங்களில் நிர்மாணிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட 25,420 மலசலகூடங்களில் 13,098 மலசலகூடங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட பதுளை மாவட்டத்தின் 3,896 மலசலகூடங்கள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் 3,937 மலசலகூடங்களில் முறையே 57 சதவீதம் மற்றும் 27 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பதுளை மாவட்டத்தின் 2,221 மலசலகூடங்கள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் 1,065 மலசலகூடங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | (i) மலசலகூட நிர்மாண கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம்.<br>(ii) உரிய திகதிகளினுள் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்திட்ட குறிக்கோள்களை அடைய முடியாது. | கிராமிய பெருந்தோட்ட பகுதிகளில் கேள்வி குறைவாக உள்ளதால் மலசலகூட நிர்மாணம் 21,000 அலகுகளிற்கு குறைக்கப்பட்டிருந்தது. | உரிய கால எல்லையினுள் பூர்த்தி செய்யும் பொருட்டு வேலைகள் ஒழுங்காக கண்காணிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் 31 நிறுவனரீதியான சுகாதார அலகுகள் மற்றும் 491 விசேட தேவையுடைய பயனாளர் சுகாதார அலகுகள் என்பன மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் ஒற்றை எண்ணிக்கையிலான அலகுகளேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | விசேட தேவைகளை கொண்ட சமூகத்திற்கான மலசலகூடங்களின் நிர்மாணக் கிரயம் ரூபா 400,000 இற்கு மேல் அதிகரித்திருந்ததால் அலகுகளின் எண்ணிக்கை 50 அலகுகளிற்கு குறைக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பெறுப்பு மற்றும் தேசிய சமுதாய மற்றும் நீர் வழங்கல் திணைக்களம் என்பவற்றிற்கு பதினொரு வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பாக ரூபா 14.26 மில்லியன் ஏற்பட்டிருந்தது | செயற்திட்டத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் நோக்கங்களை தவிர்த்து செயற்திட்ட சொத்துக்கள் பயன்படுத்தப்படுதல். | நீர் சபைக்கு விடுவிக்கப்பட்ட ஏழு வாகனங்கள் வாடகை உடன்படிக்கை காலாவதியான பின்னர் மீளபெறப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்பார்வை செய்வதற்கு இந்நிறுவனங்கள் உதவுகின்றதால் இவ்வாகனங்கள் அவற்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. | உரிய நிறுவனங்களிடமிருந்து வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு 27 பதவிநிலைகளை கொண்டிருந்தது. அதில் பிரதி செயற்திட்ட பணிப்பாளர், பொறியியலாளர் மற்றும் சமூகவியலாளர் போன்ற முக்கிய பதவிகள் உள்ளடங்கலாக 15 பதவிநிலைகளின் 57 வெற்றிடங்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 ஆண்டுகளிற்கு மேலாக நிரப்பப்படாதிருந்தது. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆம் | (i) செயற்திட்ட செயலாற்றல் மோசமாக பாதிப்படையும்.<br>(ii) சம்பளம் மற்றும் ஏனைய படிகளின் கொடுப்பனவு மீதான கட்டுப்பாடு பலவீனமடையக்கூடும். | காணி உத்தியோகத்தர், அளவையாளர் மற்றும் படவரைஞர் சேவைகளிற்கான தேவைப்பாடு காணப்பட்டதால் பதவியணியினரை அதிகரிப்பதற்கான நன்கொடை முகவரிடமிருந்தான அங்கீகாரத்துடன் அவ் வேலைகள் பூர்த்தி செய்யகப்படும் வரை சேவை ஒப்பந்தங்கள் ஊடாக உரிய | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக வெளி நிறுவனங்களிடமிருந்து 135 ஊழியர்களை செயற்திட்டம் பணிக்கமர்த்தியிருந்ததுடன் ரூபா 57.93 மில்லியன் கூட்டுத்தொகையான சம்பளம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அதில் 24 ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத அளவையாளர், படவரைஞர், காணி உத்தியோகத்தர், வேலைத்தள மேற்பார்வையாளர் போன்ற 08 பதவிநிலைகளில் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.